# பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
# ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
# Chief Secretary's Secretariat, Northern Provincial Council

மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කයිතඩි
**Provincial Council Complex , A9 Road, Kaithady**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


எனது இல :- NP/09/A&P/04/12/CIR/2021 06.10.2021

மாகாண நிதிச் சுற்றுநிருபம் இல :- **PF/AP/01/2021**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்

**மாகாண நிறுவனங்களில் காணப்படும் ஆதனங்கள், பொருட்பட்டியல் மற்றும் இருப்பு பதிவுப் பொருட்களின் வருடாந்த சுற்றாய்வு**

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களில் மாகாண நிதி விதிகள் 365 - 382 இன் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

இதற்கமைய தங்களது அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் உள்ள இருப்புப் பொருட்களின் வருடாந்த சுற்றாய்வினை முடிவுறுத்தல் தொடர்பாக கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விடயம் | அமைச்சொன்றில் / திணைக்களமொன்றில் அலுவலகத்திற்கு உரித்துடைய பிராந்திய அலுவலகங்கள் இல்லாவிடில் | அமைச்சொன்றில் / திணைக்களமொன்றில் அலுவலகத்திற்கு உரித்துடைய பிராந்திய அலுவலகங்கள் இருப்பின் |
|---|---|---|---|
| 01 | குறித்த ஆண்டிற்கான சுற்றாய்வுச் சபையினை நியமித்தல் | குறித்த நிதியாண்டின் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் | குறித்த நிதியாண்டின் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் |
| 02 | குறித்த ஆண்டிற்கான சுற்றாய்வுச் சபையின் பௌதீக நடவடிக்கைகளை பூர்த்திசெய்து, சுற்றாய்வுச் சபையின் அறிக்கையை திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பித்தல் | அடுத்த நிதி ஆண்டின் பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு முன்னர் | அடுத்த நிதி ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் |


பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
**DEPUTY CHIEF SECRETARY**

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 320 2571 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / සැලසුම්කරණ / PLANNING — Tel : 021 223 0355 : 021 223 0451 Fax : 021 223 0354 e-mail : npplan@sltne

ஆளணிப்பயிற்சி / පිරිස් පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதம உள்ளகக்கணக்காய்வாளர் / ප්‍රධාන අභ්‍යන්තර විගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com

| | | | |
|---|---|---|---|
| 03 | மேலே 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றாய்வுச் சபை அறிக்கைக்கமைவாக பற்றாக்குறைகளும் மிகைகளும் தொடர்பாகவும், பொது 47 அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் | அடுத்த நிதி ஆண்டின் மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் | அடுத்த நிதி ஆண்டின் மே 15 ஆம் திகதிக்கு முன்னர் |
| 04 | சுற்றாய்வு சபையின் அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் (தொடர் நடவடிக்கை உட்பட) | அடுத்த நிதி ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் | அடுத்த நிதி ஆண்டின் மே 31 ஆம் திகதிக்கு முன்னர் |
| 05 | சுற்றாய்வுச் சபை தொடர்பான மேலே 01-04 இல் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கைகள் நிறைவேறியமை பற்றி மாகாணத் திறைசேரிக்கு அறிவித்தல். | அடுத்த நிதி ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் (தொடர் நடவடிக்கை உட்பட்ட அறிக்கையின் பிரதி) | அடுத்த நிதி ஆண்டின் மே 31 ஆம் திகதிக்கு முன்னர் (பொழிப்பு அறிக்கை மட்டும்) |

மேலும், நீங்கள் கணக்கீட்டு உத்தியோகத்தரொருவராக செயற்படுகின்ற நிறுவனத்தின் கீழ் வருடாந்த பொருட்கள் சுற்றாய்வுச் சபைகள் பல நியமிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் குறித்த சபைகளினது அறிக்கைகள் அனைத்தும் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பப்பட்டமை தொடர்பான பொழிப்பினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 01 இற்கமைவாக தயாரித்து முன்னைய வருடத்திற்காக இடம்பெற்ற சுற்றாய்வுச் சபை செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டமை தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பொழிப்பறிக்கையினை நடைமுறை வருடத்தின் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன் மாகாணத் திறைசேரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

வருடாந்த சுற்றாய்வில் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மாகாண நிதி விதி 365.1 இற்கிணங்க செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில் மாகாண நிதி விதி 377 இல் குறித்துரைக்கப்பட்டதற்கமைய அடையாளம் காணப்பட்ட பாவிக்க முடியுமான மிகையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் அதாவது தமது அமைச்சுக்கோ அல்லது திணைக்களத்திற்கோ அவசியமற்றபோதும், வேறு அமைச்சு / திணைக்களத்தின் பாவனைக்காக பெற்றுக்கொள்ளமுடியுமான பொருட்களை/உபகரணங்களை, அப்பொருட்கள் / உபகரணங்கள் தேவைப்படுகின்ற அமைச்சொன்றுக்கு, திணைக்களமொன்றுக்கு பொருட்களை / உபகரணங்களை வழங்கியமை பற்றியும் (பொது 141) பொறுப்பேற்றமை பற்றியும் (பொது 219)

எழுத்து மூலமான சான்றுடன் பொருட்பட்டியல் மாற்றலின் மூலம் கையளிக்கப்படல் வேண்டும் என்பதுடன், பொருட்களின்/உபகரணத்தின் கொள்விலை அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதியினை வழங்குகின்ற அமைச்சின் / திணைக்களத்தின் புத்தகங்களில் இருந்து நீக்கப்படுவதுடன், பெற்றுக்கொள்கின்ற அமைச்சு / திணைக்களம் அதே பெறுமதியினை பதிவேடுகளில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்வேண்டும்.

மேலும் மாகாண நிதி விதி மற்றும் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கமைய சுற்றாய்வு அறிக்கையின் மீது தொடர்நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

S.M. Saman Bandulasena
Chief Secretary
Northern Province

S.M.சமன் பந்துலசேன
பிரதம செயலாளர், வ.மா

பிரதி: 1. கௌரவ ஆளுநரின் செயலாளர், ஆளுநர் அலுவலகம், வ.மா– கௌரவ ஆளுநர் அவர்களுக்கு தயவுடன் அறியத்தருவதற்காக

2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம், வ.மா
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாகாணக் கணக்காய்வு அலுவலகம், வ.மா
} தயவுடன் தகவலுக்காக

பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
DEPUTY CHIEF SECRETARY

நிர்வாகம்
පරිපාලන
ADMINISTRATION
Tel : 021 320 2571 (Dir)
: 021 222 0960 (Gen)
Fax : 021 222 0950
e-mail : ppas.np@gmail.com

நிதி
මුදල්
FINANCE
Tel : 021 222 0850 (Dir)
: 021 222 0854 (Gen)
Fax : 021 222 0853
e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல்
ක්‍රමසම්පාදන
PLANNING
Tel : 021 223 0355
: 021 223 0451
Fax : 021 223 0354
e-mail : npplan@sltne

ஆளணிப்பயிற்சி
පිරිස්පුහුණු
PERSONNEL TRAINING
Tel : 021 739 1250 (Dir)
: 021 739 1254 (Gen)
Fax : 021 739 1257
e-mail : npmdti@gmail.com

பிரதமஉள்ளககணக்காய்வாளர்
ප්‍රධානඅභ්‍යන්තරවිගණක
CHIEF INTERNAL AUDITOR
Tel : 021 222 0796 (Dir)
: 021 222 9528 (Gen)
Fax : 021 222 0796
e-mail : npcaudit@yahoo.com

படிவம் 01

பிரதிப் பிரதம செயலாளர் – நிதி,
மாகாணத் திறைசேரி,
வடமாகாணம்.

**கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இருப்புப் பொருட்கள் சுற்றாய்வுச்சபை அறிக்கைகளின் பொழிப்பறிக்கை**

PF/AP/01/2021 ஆம் இலக்க 06.10.2021 ஆம் திகதிய வடக்கு மாகாண நிதிச் சுற்றுநிருபத்திற்கமைவாக எமது அமைச்சு / திணைக்களத்தின் ............. வருடத்திற்கான கீழே குறிப்பிடப்பட்ட பிராந்திய அலுவலகங்களின் இருப்புப் பொருட்கள் சுற்றாய்வு தொடர்பான சுற்றாய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

| தொ.இல | செலவினத் தலைப்பு மற்றும் பெயர் | சுற்றாய்வு அலுவலகங்களின்/ அலகுகளின் பெயர் | சுற்றாய்வு அறிக்கை (தொடர் நடவடிக்கை உட்பட) கணக்காய்வாளர் நயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

.............................................................

அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவர்

திகதி :-..................................